தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

27.07.2025

அன்புக்கும் மதிப்புக்குமுரிய நிர்வாகிகள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் வணக்கம்.

அன்புடையீர்,

**“தளராத அதே உறுதியுடன் ஒற்றுமையாகப் பயணிப்போம்”**

**2004**இல் உரியவர்களாலே தரப்பட்ட கட்டமைப்பு இது. இக்கட்டமைப்பை பல வழிகளாலும் எத்தனையோ இடர்களை ஏற்படுத்தி கையகப்படுத்தும் முயற்சியில் பலர் ஈடுபட்டார்கள். இம் முயற்சிகள் யாவும் உங்களின் அசையா உறுதியாலும், ஒற்றுமையாலும் முறியடிக்கப்பட்டன. அதே வழியில் தான் இப்போதும் ஒருசிலரால் எடுக்கப்படுகின்ற முயற்சியும் கையகப்படுத்தும் முயற்சி தான். இவர்களும் பொது உடைமையான தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளையை தனி உடைமையாக்கும் முயற்சியிலே ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் எடுத்த முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட்டு TEDC-UK சொத்துகள் யாவும் பறிபோகாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## நிர்வாகச் சந்திப்புகள்

பள்ளி நிர்வாகிகளுடனான அடுத்த சந்திப்பு எதிர்வரும் 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. *(விபரம் கீழே உள்ளது)* அதுவரை வேறு எந்தவொரு பள்ளி நிர்வாகிகளுடனான சந்திப்புகளும் ஒழுங்கு செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மாற்றங்கள் இருப்பின் எமது உத்தியோகபூர்வ தொடர்பு எண்கள் மூலமும், இணையத்தளம் ஊடாகவும் உங்களைத் தொடர்பு கொள்வோம்.

இது தவிர்ந்து, **TEDC UK** இன் பெயரில் அவசர அவசரமாக ஒழுங்குகள் செய்யப்படும் சந்திப்புகளுக்கும் எமக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை. இந்த வகையில் இன்று 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00மணிக்கு நடக்க இருக்கும் அவசரமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஒன்று கூடலுக்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இவ் ஒன்று கூடல் இக்கட்டமைப்பை கைவசப்படுத்த முயற்சிப்பவர்களால் எமது


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

ஒற்றுமையைக் குலைத்து பிரிவினைகளை ஏற்படுத்தி நிறுவனத்தை அடியோடு இல்லாமல் அழிப்பதற்காக திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனவே, எமதன்புக்குரிய நிர்வாகிகளே, ஆசிரியர்களே உறுதி தளராது எம்மவர்களால் உருவாக்கப்பட்ட கட்டமைப்பைக் காப்பாற்ற வேண்டிய கடமை உங்கள் அனைவருக்குமானது.
அனைவரும் சிந்தித்துச் செயற்படுவோம், பிரிவினைகளை ஒழிப்போம்.
பள்ளி ஆசிரியர்களுக்கான அழைப்புகளும் வழமைபோல் நிர்வாகிகளாகிய உங்கள் ஊடாகத்தான் பேணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
மேலும்,
எமது வழமையான செயற்பாடுகள் எந்தவித தளம்பலும் இன்றித் தொடரும் அதன் அடிப்படையில்

1) பள்ளிகளுக்கான பாடநூல்கள் இணைத்யதளம் (*online*) மூலமாக விண்ணப்பிப்பவர்களுக்கு வழங்கல்கள் வழமைபோல நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
2) வழமையான நடைமுறையாக்கக் கல்வியாண்டு நாட்காட்டி 30.07.2025 புதன்கிழமை இரவு பள்ளிகளுக்கான மின்னஞ்சலில் அனுப்பிவைக்கப்படும்.
3) தமிழ்த்திறன் போட்டிகளுக்கான அணியமாக்கல்:
பள்ளி ஆசிரியர்களுக்கானது.

**வரும் 02.08.2025** ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு தமிழ்த்திறன் போட்டி தொடர்பான கலந்துரையாடல் Zoom இணைப்பினூடாக நடைபெறும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இதில் அனைத்துப் பள்ளி ஆசிரியர்களும் கலந்துகொண்டு மாணவர்களது தமிழ்த்திறனை மேம்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

4) **17.08.2025** ஞாயிற்றுக்கிழமை வழமைபோல அனைத்துப்பள்ளிகளுக்குமான தமிழ்மொழிப் பொதுத்தேர்வு 2025 முடிவுகள் அனுப்பி வைக்கப்படும்.
5) பள்ளி நிர்வாகிகள், தலைமை ஆசிரியர்கள் நேரடிச்சந்திப்பு **07.09.2025** ஞாயிற்றுக்கிழமை.

கடந்தகாலங்களைப் போல நேரடியாகத் தங்களனைவரையும் சந்தித்து உண்மையான முழுவிளக்கங்களையும், அத்துடன் தங்களது ஐயப்பாடுகளையும் தீர்க்கவேண்டியது எமது தலையாய கடமையாகும். அதனைச் செய்வதற்கு நாம் அணியமாக உள்ளோம். ஆனால் தற்போது பள்ளிகளின் விடுமுறை கரணியமாக உடனடி நேரடிச் சந்திப்புகளுக்கு ஏற்ற காலம் அல்லாததால் நேரடிச் சந்திப்பு



Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

அனைத்துப்பள்ளிகளும் தொடங்கும் வார இறுதி நாளான 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

---

•சந்திப்பு : 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு
இடம்: பின்னர் அறிவிக்கப்படும்.

**நிகழ்ச்சி நிரலாக,**

- 2025-2026 கல்வியாண்டுக்கான செயற்றிட்டங்கள்.
- கடந்தகாலக் கணக்கறிக்கை சமர்ப்பித்தல். ( 2014 - 2015 இலிருந்து 2022 - 2023 வரை ஒவ்வொரு வருடமும் நிர்வாகிகள் சந்திப்பில் கணக்கறிக்கை பிரதிகள் கையளிக்கப்பட்டது போன்று)
- உங்களுக்கான ஐயப்பாடுகளைத் தெளிவு படுத்தல்.
- இடைவேளை - விருந்தோம்பல்
- 2009 இன் பிற்பாடு எமக்கேற்பட்ட பல இடர்ப்பாடுகளை எம் உறுதியாலும் ஒற்றுமையாலும் எதிர்கொண்டோம். இவ்விடர்கள் தொடர்ந்து வராது சட்டரீதியாக தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவைச் சொத்துகள் அனைத்தும் காப்பாற்றப்படுதல் தொடர்பான கலந்துரையாடல்.

**•ஒற்றுமைக்கான உறுதியுடன் நிறைவு**

**தமிழே எங்கள் உயிர்!**

---

கடந்தகாலங்களைப் போல தங்கள் ஒத்துழைப்புகளை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதுடன்
நன்றி
நிர்வாகம்
இயக்குநர்கள்
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை

27.07.2025


Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012